**தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ்**
**அமெரிக்க வர்த்தக சம்மேளன நிகழ்வில் ஆற்றிய உரை**
**நவம்பர் 29, 2018**

**தூதுவர், அலெய்னா பி. டெப்லிஸ்ட் :** அன்பான அறிமுகத்துக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நிகழ்வில் கலந்துகொள்வதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் இங்கு உள்ளே நுழையும்போது உங்களில் பலருக்குக் கூறியதைப் போன்று கொழும்புக்கு வந்து முதல் நான்கு வாரங்களில் நாளாந்தம் நீங்கள் பத்திரிகைகளில் வாசிக்கும் நிகழ்வுகள் பற்றி எனது சில பிரதிபலிப்புக்கள் உள்ளன. இருந்தபோதும், விடுமுறை பருவ காலத்தை நெருங்கும் போது கடந்த காலம் பற்றிய எமது பிரதிபலிப்புக்களை வெளியிடுவது வழமை என்பதை முதலில் கூறிக் கொண்டு, வர்த்தக சம்மேளனத்தின் சாதனைகள் பற்றி குறிப்பிடுவது மிகவும் முக்கியமானது எனக் கருதுகின்றேன். மிகவும் வினைத்திறனான குழுவொன்று செயற்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவிருப்பதுடன், எதிர்காலத்தில் அமெரிக்க முதலீடுகள் மற்றும் இலங்கையுடனான தொடர்புகளை மேலும் வலுப்படுத்தக் கூடியவகையில் அமெரிக்க வர்த்தக சம்மேளன குழுவின் உறுப்பினர்கள் மற்றும் நிறைவேற்றுக் குழுவுடன் இணைந்து செயற்பட எதிர்பார்த்துள்ளேன்.

எதிர்காலம் பற்றி சிந்திப்பதற்கான காலம் கனிந்திருப்பதுடன், எதிர்காலத்தில் நாம் எவற்றைக் கொண்டுவரப்போகின்றோம் என்பதையும் திட்டமிடவேண்டும். எனது குழுவானது இரு நாட்டுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை அடுத்தகட்டத்துக்கு முன்னேற்றிச் செல்வதற்கான ஈடுபாட்டைக் காண்பிப்பதற்கு ஆர்வமாக இருக்கும் அதேநேரம், தற்போதைய சூழ்நிலையில் மாற்றத்தை கொண்டு வரும் மிக முக்கிய கொள்கை மற்றும் ஒழுங்குமுறை மாற்றங்களுக்காகவும் செயற்படுகிறது.

எமது முதலீட்டு உறவுகள் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து வருவதுடன், கடந்த பத்து வருடங்களில் இரு வழிமுறை வர்த்தக செயற்பாடுகள் 40 வீதத்தினால் அதிகரித்திருப்பதை என்னால் அறிந்துகொள்ளக்கூடியதாகவுள்ளது. 2007ஆம் ஆண்டு நாம் 2.3 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்த நிலையில், அது 2017ஆம் ஆண்டு 3.2 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. 2018ஆம் ஆண்டு மிகவும் முக்கியத்துவம் மிக்க மற்றும் சவாலான ஆண்டாக இருக்கின்றபோதும் இரு நாடுகளும் வலுவான உறவுகள் இருப்பதாக எதிர்வுகூறப்பட்டுள்ளன.

இலங்கையின் முன்னணி ஏற்றுமதி சந்தையாக அமெரிக்கா தொடர்ந்தும் காணப்படுவதுடன், இந்த நாட்டில் பாரிய வெளிநாட்டு முதலீடுகளை மேற்கொள்வதில் அமெரிக்க நிறுவனங்கள் முன்னிலை வகிக்கின்றன. நாம் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புக்கள், திறன்கள், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் வர்த்தக சூழல்களுக்குத் தேவையான உயர்ந்த நெறிமுறை கொள்கைகள் மற்றும் பணியிட தரங்களையும் கொண்டுவந்துள்ளோம். இவை தொடர்பில் நாம் பெருமையடைய முடியும் எனக் கருதுவதுடன், நானும் உண்மையில் பெருமையடைகிறேன். அமெரிக்காவுக்கும், இலங்கைக்கும் இடையில் நாம் கொண்டிருக்கும் உறவுகளின் தரத்தை விளக்குவதற்கு இவை உதவியாக இருக்கும் என நான் கருதுகின்றேன்.

ஆயினும் அரசியல் சூழலைக் குறிப்பிட வேண்டியுள்ளது. வளர்ச்சியடைந்துவரும் இந்த உறவுகள் உண்மையில் ஆபத்தில் இருப்பதாக எண்ணுவதுடன், எதிர்கால செயற்பாடுகள் குறித்து நோக்கவேண்டியிருப்பதுடன், இது தொடரவேண்டும் என்பது என்ற கவலையும் உள்ளது. நான் இங்கு வந்ததிலிருந்து அரசியல் நெருக்கடி எனது பெரும்பாலான கவனத்தைப் பெற்றுள்ளதுடன், இந்த நெருக்கடியானது இலங்கையின் ஜனநாயக நிறுவனங்களுக்கு மாத்திரம் அச்சுறுத்தலாக அன்றி, இலங்கையின் பொருளாதாரத்துக்கும், கடந்த பல வருடங்களாக அதனுடன் இணைந்த அடைவுகளுக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

அதேநேரம், சில பொருளாதார சுட்டிகள் ஏற்கனவே கீழ்நோக்கிச் செல்லத் தொடங்கியிருப்பதுடன், ஒக்டோபர் மாதத்து சுட்டிகளுடன் ஒப்பிடும்போது அரசியல் நெருக்கடி அவற்றை மோசமான நிலைக்கு இட்டுச் சென்றிருப்பதாகக் கருதுகின்றேன். நிலைமைகளை மோசமாக்கியிருப்பது மாத்திரமன்றி, ஏனையவர்களுக்கு புதிய வருடத்திலும் நெருக்கடி நிலைக்குத் தள்ளிச் சென்றுள்ளது. குறிப்பாக அரசியல் சூழலில் உள்ள எமது சகபாடிகள் அதனை தற்பொழுது சிந்திக்கின்றனர் இல்லை

பொருளாதார வளர்ச்சி எதிர்வுகூறல் மிகவும் குறைவாக உள்ளது. மத்திய வங்கியின் தலையீடு இருக்கின்றபோதும் இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சிகண்டு வருகிறது. சுற்றுலாத்துறையில் 12 முதல் 30வீதம் வரையிலான முற்பதிவுகள் இரத்தாகியுள்ளன. அமெரிக்கா உள்ளிட்ட அபிவிருத்திப் பங்காளர்கள் தமது திட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளன. 2019ஆம் ஆண்டில் 5.6 பில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலுத்தவேண்டிய இலங்கையின் நிதி இயலுமை சவாலுக்கு உட்பட்டிருப்பதாக நான் நினைக்கின்றேன். மூடிஸ் நிறுவனத்தின் இலங்கை தொடர்பான கடன் மதிப்பீட்டை வீழ்ச்சியடைந்திருப்பதானது முதலீட்டாளர்களின் நம்பிக்கையில் நிச்சயமாகத் தாக்கம் செலுத்துவதுடன், நிலைமைகள் மாற்றியமைப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்ற போதிலும் அதற்கு கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். அரசியல் நெருக்கடி உடனடியாக தீர்க்கப்படாவிட்டால் இந்த பணியும் மேலும் சவால் மிக்கதாகவே இருக்கப் போகிறது.

அது பற்றி என்ன நினைக்கின்றோம்? தற்பொழுது தோன்றியுள்ள அரசியல் நெருக்கடி வர்த்தக செயற்பாடுகளுக்கு சாதகமானது அல்ல என்பதை உங்களில் பலர் தனிப்பட்ட தொடர்புகளின் ஊடாகத் தெரியப்படுத்தியிருப்பீர்கள் என்பதை நான் அறிவேன். இது இலங்கையின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு நல்லது அல்ல என்பதுடன் இலங்கையின் பங்காளர்கள் மற்றும் நண்பர்களுக்கும் நல்லதல்ல. விரைவான அரசியல் தீர்வொன்றுக்கு வருமாறு சகல தரப்பில் உள்ள அரசியல்வாதிகளிடமும் நாம் கேட்டுக்கொள்கின்றோம். அரசியல் தீர்வு, குறிப்பாக வெளிப்படையானதும், ஜனநாயகமானதுமாக அமைவதுடன், உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளக் கூடிய சட்டரீதியான அரசாங்கத்தை உறுதிப்படுத்துவதாக அது அமையவேண்டும்.

பொருளாதாரம், பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் மக்களுக்கிடையிலான தொடர்புகள் போன்ற நீடிக்கப்பட்ட உறவுகள் காரணமாக இந்த நெருக்கடி தீர்க்கப்பட வேண்டும் என்பதற்கு நாம் ஆதரவளிக்கின்றோம். அடிப்படையில் இந்த நெருக்கடியால் நாட்டுக்கு ஏற்படுத்தப்பட்ட பாதிப்பு மற்றும் இங்கு பங்குதாரர்களாக இணைந்துள்ள மக்களுக்காகவும் அரசியல் நெருக்கடி தீர்க்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் நாம் ஆதரவு தெரிவிக்கின்றோம். ஸ்திரமற்ற நிலை தொடர்வது இலங்கையின் வர்த்தக செயற்பாடுகளுக்கு மாத்திரமன்றி நாட்டு மக்களுக்கும் பாதிப்பாக அமையும். நண்பர்கள் மற்றும் பங்குதாரர்கள் என்ற அடிப்படையில் அதனை நாம் விரும்பவில்லை.

அரசியல் நெருக்கடிக்கு உடனடியான மற்றும் வெளிப்படையான தீர்வுக்கான நம்பிக்கையை வெளியிடுவதானது, சிறந்த நட்புறவை நாம் பேண முடியும் என்ற நம்பிக்கையிலும், கள்ளம்கபடமற்ற மற்றும் நேர்மையின் அடையாளமாக அமையும் என நம்புவதாலாகும். எமது ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் தலையிடுவதற்காக அல்ல. இது தொடர்பில் நான் கடந்த சில வாரங்களாக பத்திரிகைகளில் அதிகமாக வாசித்துள்ளேன். தலையீடு என்பது போலியான பேஸ்புக் குழுக்களின் ஊடாக வாக்காளர்களை முனைவடையச் செய்வது, எங்கிருந்து அனுப்பப்படுகின்றன என்று கூடத் தெரியாது அனுப்பப்படுவதாகும். அல்லது மூடப்பட்ட கதவுகளுக்குள் பணப்பரிமாற்றமாக இருக்கலாம். அமெரிக்கா இலங்கையில் கொண்டிருக்கும் வெளிப்படையான உறவு இதுவல்ல. எமது வர்த்தக சமூகம் எங்கும் இவ்வாறான உறவுகளைக் கொண்டிருக்காது என்பது எனக்குத் தெரியும். வெளிப்படையான கொள்கை அறிக்கைகள் மற்றும் எமது பங்காளர்களின் எதிர்பார்ப்பு என்பன தரமான உறவுகளைப் பேணுவது என்பதாகும். எமது நிலைப்பாட்டை நாம் முன்நிலைப்படுத்தியுள்ளோம். தனிப்பட்ட ரீதியில் கூறுவதையே நாம் பகிரங்கமாகவும் கூறுகின்றோம்.

இது நாம் இந்த நாட்டின் மீது கொண்டிருக்கும் வியக்கத்தக்க மரியாதையின் ஒரு பகுதியாகும். நாம் பிராந்தியத்தில் பரந்துபட்ட விடயங்கள் குறித்து கவனம செலுத்தியிருப்பதுடன், நம்பிக்கை கொண்டுள்ளோம். சுதந்திரமான மற்றும் திறந்த இந்து-பசுபிக் ஒன்றை காண விரும்புகின்றோம். இந்தப் பிராந்தியத்தில் பங்குதாரர்களை ஏற்படுத்திக் கொள்வது அமெரிக்காவின் விருப்பம் என ஜனாதிபதி ட்ரம்ப் அண்மையில் கூறியிருந்தார். வெற்றிகரமான, சுபீட்சமான மற்றும் எவரிலும் தங்கியிருக்காத பங்குதாரர்களை எதிர்பார்க்கின்றோம். பரஸ்பர மரியாதையே எமது பங்கான்மையின் அடிப்படையாக இருக்கும். ஜனநாயகம் மற்றும் உலகளாவிய ரீதியில் மனித உரிமைகளின்

வெற்றியாளர்கள், நண்பர்கள் என்ற ரீதியில் இலங்கையின் அரசியல் நெருக்கடி எமது இருதரப்பு உறவுகளை எவ்வாறு பாதிக்கும், இலங்கையை அது எவ்வாறு பாதிக்கும் என்ற மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான பிணைப்பு எமக்கு ஏற்னவே உள்ளது.

இந்த நிலைமை எவ்வாறு, எப்படி தீர்க்கப்படலாம் என நாம் ஊகிக்கவில்லை. இது இலங்கை மக்கள் மற்றும் அரசியல்வாதிகளைப் பொறுத்தது என நான் கருதுகின்றேன். இந்த நாட்டினதும் நாட்டு மக்களினதும் நன்மைக்காக இந்த நெருக்கடி விரைவில், வெளிப்படையான முறையில் மற்றும் ஜனநாயக ரீதியில் தீர்க்கப்படும் என நாம் நம்புகின்றோம்.

தற்போதைய நிலைலமையை நாம் ஒரு கணம் மறந்து முன்னோக்கிப் பார்த்தால், எனது பணியாளர்களை இன்று காலை சந்திக்கும்போது நான் கூறியதும், இந்த அழுத்தமான தலைப்பைவிடுத்து எதிர்காலம் தொடர்பில் கதைப்போம் என்பதாகும்.

எமது எதிர்பார்ப்புக்கள் மற்றும் அபிலாஷைகள் என்ன? அவற்றுக்காக நாம் எங்கு செல்ல முடியும்? நான் எனது உரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப் போன்று வர்த்தக மற்றும் முதலீட்டில் வளர்ச்சியையே நாம் எதிர்பார்க்கின்றோம்.

பொருத்தமான மற்றும் நியாயமான பொருளாதாரர வளர்ச்சியை இலங்கையில் அடையமுடியும் என்பதுடன், பல்வேறு முதலீடுகள் மற்றும் வர்த்தக செயற்பாடுகளில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என நான் கருதுகின்றேன். இந்து-பசுபிக் பிராந்தியத்தில் இலங்கை மிகவும் முக்கியமான இடத்தில் அமைந்திருப்பதுடன், இப்பிராந்தியத்தில் எமது வருடாந்த வர்த்தகப் பெறுமதியானது 1.8 ட்ரில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இந்து-பசுபிக் கிராந்தியத்தில் எமது மொத்த முதலீடு ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டொலர்களாகும். சீனா, ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகியவற்றின் மொத்த முதலீடுகளைவிட இது அதிகமாகும்.

இங்கு பாரிய வாய்ப்புக்கள் காணப்படுவதுடன், அமெரிக்கா வளர்ச்சியின் ஒரு பகுதியாக இருக்கும் என்பது எனக்குத் தெரியும்.

அண்மைய கருத்துக்கள ஆயிரியர் தலையங்கத்தில், எமது உப ஜனாதிபதி பென்ஸ் பில்ட் சட்டம் (BUILD Act) பற்றிக் குறிப்பிட்டிருந்தார். உலக நாடுகளில் முதலீடு செய்வது மற்றும் இணைந்து செயற்படுவது தொடர்பான அமெரிக்காவின் பலத்தை அதிகரிக்கும் புதிய சட்டமாகும். இது அமெரிக்காவின் அபிவிருத்தி நிதியளித்தல் வல்லமையை 60 பில்லியன் அமெரிக்க டொலர்களாக விஸ்தரிக்கவிருப்பதுடன், உலகத் தரம்வாய்ந்த துறைமுகங்கள், விமான நிலையங்கள், வீதிகள், ரயில் பாதைகள், குழாய் இணைப்புக்கள், தகவல் இணைப்புக்கள் போன்ற பல்வேறு விடயங்களில் அமெரிக்காவுக்கும், சம்பந்தப்பட்ட நாட்டுக்கும் நன்மையளிப்பதற்கு இடமளிப்பதாக அமையும். இலங்கையில் இவ்வாறான விடயங்களைக் கட்டிக்கொடுப்பதற்கும் நாம் தயாராகவிருப்பதுடன், உங்களில் பலர் இது பற்றி ஏற்கனவே தெரிந்திருப்பீர்கள் என நம்புகின்றேன்.

அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிக்கு தனியார் துறையினரின் பங்களிப்புத் தொடர்பிலும் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். அரசாங்கத்தின் பங்களிப்பை சுட்டிக்காட்டியிருந்தாலும், உண்மையான பொருளாதார வளர்ச்சி என்பது உங்கள் அனைவரினதும் பங்களிப்பையும் ஒன்றிணைப்பதன் ஊடாகவே சாத்தியமாகும் என நம்புகின்றேன். நாடுகளுக்கிடையிலான உறவுகளை நீங்கள் ஏற்படுத்துவது மற்றும் ஈடுபாடு காட்டுவதன் ஊடாகவே இதனைச் சாதகமாக்க முடியும் என்பதுடன், இவற்றையும் நாம் கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளோம்.

எதிர்வரும் மாதங்களில் சிறந்த வர்த்தக சூழல் தொடர்பில் உங்களிடமிருந்து சாதகமான கருத்துக்களையும், எமது பொருளாதார அபிலாஷைகளை எவ்வாறு அடையமுடியும் என்பதையும் அறியமுடியும் என எதிர்பார்க்கின்றேன். முக்கியமாக வர்த்தக மற்றும் முதலீடுகளில் காணப்படும் தடைகளை எவ்வாறு விலக்குவது என்பது பற்றியதாகும்.

அமெரிக்க வர்த்தக சம்மேளனம் அண்மையில் வர்த்தக மற்றும் முதலீடு தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டிருப்பதாக நான் அண்மையில் அறிந்துகொண்டேன். அந்த அறிக்கையை வாசிப்பதற்கு நான் எதிர்பார்த்துள்ளேன். அதன் அடிப்படையில் நடவடிக்கை

எடுப்பதற்கு எதிர்பார்த்திருப்பதுடன், தடைகளை நீக்குவதற்கு வரவேற்கத்தக்க முதலீட்டு சூழலை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களை உறுதிப்படுத்துவதற்கும் அதனை அடிப்படையாகப் பயன்படுத்த எதிர்பார்த்துள்ளேன்.

அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப உதவிகளின் ஊடாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு தூதரகம் தொடர்ந்தும் உதவியாகவிருக்கும். இரு தரப்பினருக்கும் நன்மையை ஏற்படுத்தும் வகையில் பங்காண்மையின் அடிப்படையில் செயற்படுவதற்கு அர்ப்பணிப்புடன் இருப்பதுடன், பரஸ்பரம் இரு நாடுகளும் இதன் ஊடாக நன்மை அடைவதாக அது அமையும்.

இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்தமைக்கும் அதில் என்னை உரையாற்ற அழைத்தமைக்கும் அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் மற்றும் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களுக்கு நான் நற்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அமைதியாக எனது உரையைக் கேட்டமைக்கும், கலந்துரையாடல்களை நடத்த சந்தர்ப்பம் கிடைத்தமைக்கும் மீண்டும் நன்றியைக் கூறுகின்றேன்.

விடுமுறை காலம் மகிழ்ச்சியானதாக அமைய வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, எதிர்வரும் மாதங்கள் மற்றும் வருடங்களில் உங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் எதிர்பார்த்துள்ளேன்.

நன்றி